அன்பே சிவம்
ANBE SIVAM

# தினம் தினம் ஒரு திருமுறை

# DAILY A THIRUMURAI

திருச்சிற்றம்பலம்

## நான்காம் திருமுறை
## அப்பர் அற்புதம்




## திருவதிகை வீரட்டானம்

பதிக வரலாறு : பண் : **காந்தாரம்**

பசுபதியார்அடியார்க்கு நஞ்சும் அமுதாயிற்று. அவ்வற் புதத்தைக் கண்டனர் அமணர். அஞ்சினர்; ஓடினர்; காவலனை மேவினர். ` நஞ்சு கலந்து ஊட்டிடவும் துஞ்சுதல் இலன். நமது சமயத்து நஞ்சுதீர் மந்திரவலிமையே அதற்குத் துணையாயிற்று. அவன் துஞ்சிலனேல், எம் உயிரும் நின்முறையும் துஞ்சுவது திடம் ` என்றுரைத்தனர். மதிகெட்ட மன்னவனும் அக் கதி கெட்டார் பேச்சைக் கேட்டான்.

`அவனைக் கடியும் திறம் எவ்வாறு?` இது மன்னன் வினா. ` நின்கொற்ற வயக்களிற் றெதிரே விடுவதுதான் இனிச் செய்யத் தக்கது `. இது அமணர் விடை. காபாலி அடியவராம் வாகீசத் திருவடிமேல் கோபாதி சயமான கொலைக் களிற்றைவிடச் சொன்னான் , பூபாலர் செயலை மேற்கொண்ட புலைத்தொழிலோன்,



கூற்றினும் மிக்க தாய்க் களிற்று வடிவில் வரும் மதவெற்பு ஊழிமுடிவில் எழும் தீயைப்போல் சினந்து விரைந்து ஓடிப்போந்தது. போந்தால் என்ன? அப்பரோ அஞ்சுவார்? அப்பர் உள்ளத்துள் அப்பர் பொற் கழல் இருக்கின்ற தெளிவு , மதகரியை அஞ்சும் மயக்கம் தோன்றாதவாறு தடுத்துப் பாடுவித்தது . அதுவே மண்ணுலகு உய்ய எடுத்து மகிழ்வுடனே பாடியருளிய இத்திருப்பதிகம். இதில், வெஞ்சுடர் மூவிலைச் சூல வீரட்டர் அடியோம் நாம் அஞ்சுவது இல்லை என்று மகுடம் அறைந்திருப்பது காண்க.

**சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. 01**

பொழிப்புரை :

பொடியாக அமைந்த திருநீறாகிய வெள்ளிய சந்தனச் சேறும் முடிமணியாகிய ஒளி வீசும் பிறையும், அழகிய புலித்தோல் ஆடையும், வளர்கின்ற பவளக்கொடி போன்ற நிறமும், தலைமை பொருந்திய பாதுகாவலாக அமைந்த, பகைவரோடு மாறுபடும்

காளையும், மார்பில் பரவியிருக்கின்ற பாம்புகளும், திண்ணிய கரையைக் கொண்ட பெரிய நீர்ப்பரப்பினதாகிய கெடிலயாற்று அபிடேகத்திற்குரிய தீர்த்தமும் உடைய ஒப்பற்ற அதிகை வீரட்டருடைய அடியேம் யாம். ஆதலின் எங்களுக்கு அஞ்சுதற்குரிய பொருள் யாதும் இப்பொழுது இல்லை. இனித் தோன்றப்போவதும் இல்லை.

குறிப்புரை :

சுண்ணம் - பொடி. சுடர் - வெண்சுடர். சூளாமணி - சூடாமணி; உச்சியில் அணிசெய்யும் அரதனம். வண்ணம் - அழகு; நிறம். உரிவை - தோல். அண்ணல் - தலைமை; பெருமை. அரண் - காவல். அறம்போலக் காவல் பிறிதொன்றில்லை. அறவிடை (தரும இடபம்) என்னும் பெயர் இங்கு நினைக்கற்பாலது. ஏறு - விடை. அகலம் - மார்பு. அரவு - பாம்பு. திண் + நல் + கெடிலம். திண்மையும் நன்மையும் கெடிலயாற்றுக்குரியன. தமர் - அடியவர். யாது என்பது வகையுணர்த்தலின் ஒன்றும் என்பது ஒரு சிறிதும் என்னும் பொருட்டு ஆயிற்று. ` நற்பைங்கண் மிளிர் அரவாரமும் பூண்பிர் ` (தி.4 ப.17 பா.2) (thevaaram.org)

திருச்சிற்றம்பலம்